මාධ්‍ය නිදහස: නිරීක්ෂණ වාර්තාව
ஊடக சுதந்திரம்: கண்காணிப்பு அறிக்கை
Media Freedom Rights Monitoring Report

FMM SRI LANKA
නිදහස් මාධ්‍ය ව්‍යාපාරය
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

MFRMD

2022 மார்ச்

Vol. 02 - தொகுதி 03


மிரிஹானையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்.


அருண பத்திரிகை செய்தி ஆசிரியரை அச்சுறுத்தியமை.


பதினாறு மாதங்களின் பின்னர் கோகிலதாசன் பிணையில் விடுதலை செய்யப்பட்டமை

ஊடக சுதந்திரம் குறித்து மார்ச் மாதத்தில் நடைபெற்ற சம்பவங்கள் மற்றும் முந்தைய சம்பவங்களின் பின்தொடர்வுகள் தொடர்பில் சுருக்கமான முறையில் கண்காணித்து இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். ஊடகவியலாளர்கள் மற்றும் பொதுமக்களின் கருத்துச் சுதந்திரம் மற்றும் பேச்சுச் சுதந்திரம் தொடர்பான நிகழ்வுகள் மற்றும் புதிய சட்ட உருவாக்கம், சட்டச் சீர்திருத்தங்கள் மற்றும் அது தொடர்பான முன்மொழிவுகளுக்கான தேசிய மற்றும் சர்வதேச கருத்துகள் போன்றவற்றிலும் இந்த அறிக்கை கவனம் செலுத்துகிறது. ஊடக சுதந்திரம் மற்றும் ஊடக உரிமைகள் தொடர்பில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகச் சுதந்திர ஊடக இயக்கம் தேர்ந்தெடுத்துள்ள பகுதிகூறுகள் மற்றும் நோக்கங்களுக்கு அமைய 13 நிகழ்வுகள் மற்றும் சம்பவங்கள் மார்ச் 2022 அறிக்கையில் உள்வாங்கபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவற்றில் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் தொடர்பான 3 சம்பவங்கள், சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுப்பாடுகள் தொடர்பான 3 சம்பவங்கள், ஊடக சுயாதீனத்துவம் தொடர்பான 02 சம்பவங்கள், "தொழில்சார் நிபுணத்துவம்" தொடர்பான 02 சம்பவங்கள் மற்றும் கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் தொடர்பான 03 சம்பவங்கள் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

## மார்ச் மாதத்தில் அறிக்கையிடப்பட்ட சம்பவங்கள்:

1. மார்ச் 2 ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் கருத்து தெரிவித்தமை.
2. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு வருடமும் நான்கு மாதங்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு ஊடகவியலாளர் கோகிலதாசன் பிணையில் விடுவிக்கப்பட்டமை.
3. வவுனியா புதுக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பாகச் செய்தி சேகரிக்க சென்றபோது ஊடகவியலாளர் இராசையா ஜெயசங்கரின் புகைப்படக்கருவியை சில நபர்கள் தாக்கிச் சேதப்படுத்தியமை.
4. பத்திரிகை சுதந்திரத்தை அச்சுறுத்தும் சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை.
5. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் பேச்சு, கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்கம்குறித்து பொது கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.
6. இலங்கையில் இணையப் பாவனையாளர்களின் பாதுகாப்பையும் சுய ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு SafeWebLK நிகழ்ச்சித்திட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டமை.

7. ”மீடியா சலோன்” நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் “ஊடகத்தில் வன்முறையை ஒழித்தல்“ என்ற தலைப்பில் கீழ் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை.

8. ஹிரு தொலைக்காட்சி அலைவரிசை உரிமையாளரின் சகோதரரான துமிந்த சில்வா, ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சியின் அறிக்கையிடலில் தாக்கம் செலுத்தியமை.

9. மனித உரிமைப் பாதுகாவலர்களின் கடும் எதிர்ப்புக்குக் பாத்திரமான பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிகத் திருத்தம்) முன்மொழிவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை.

10. இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து ஏற்பாடு செய்த 2019 மற்றும் 2020 ஆண்டிற்கான சிறந்த பத்திரிகைகளுக்கான விருது வழங்கல் நிகழ்வு கொழும்பில் நடைப்பெற்றது.

11. முகப்புத்தகத்தில் பதிவிட்ட கருத்தின் காரணமாக ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் கடமை புரிந்த சுயாதீன ஊடகவியலாளர் பாரமி நிலேப்தி பணிநீக்கம் செய்யப்பட்டமை.

12. காவல்துறையினரின் ஊழல் தொடர்பில் வெளியான அறிக்கை / கட்டுரை காரணமாக அருண பத்திரிகையின் செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை.

13. மார்ச் 31, 2022 ஆம் திகதி அன்று மிரிஹானவில் நடைபெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தைச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் குழுமீது தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் புகைப்பட உபகரணங்களுக்குச் சேதம் விளைவித்தமை.

**அட்டவணை எண்: 01 அறிக்கையிடப்பட்ட மொத்த சம்பவங்களின் எண்ணிக்கை – 2022 மார்ச் மாதம்**

| உள்ளடக்கப்பட்டுள்ள ஆக்கக் கூறுகள் | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 03 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 03 |
| ஊடக சுயாதீனத்துவம் | 02 |
| தொழில்சார் நிபுணத்துவம் | 03 |
| கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள் | 02 |
| **மொத்தம்** | **13** |

## ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம்

**ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் எனப்படுவது ஊடகவியலாளர்கள் தங்களது தொழிலை உடல்சார் மற்றும் மனரீதியாக ஒர்முகப்படுத்தி சுயாதீனமாக தமது ஊடக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திர மற்றும் சுயாதீன சூழல் ஆகும். இது ஊடக சுதந்திரத்தின் அடிப்படை காரணியாகவும் காணப்படுகின்றது. அதே சமயம், ஊடகச் சுதந்திரம், கருத்துச் சுதந்திரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டுமாயின், குடிமக்கள் ஊடகங்களில் அல்லது வேறு வழிகளில் எதிர்விளைவுகளை எதிர்கொள்ளாமல் அல்லது தனது பாதுகாப்பிற்கு எவ்வித பாதிப்புக்களையும் எதிர்கொள்ளாமல் சுதந்திரமாக தனது கருத்தை வெளிப்படுத்தும் சூழல் உருவாக வேண்டும். கருத்துச் சுதந்திரம் என்பது அமைதியான முறையில் ஒன்றுகூடல், அமைதியான முறையில் போராட்டம் மேற்கொள்ளல் மற்றும் எதிர்ப்பு தெரிவித்தல் போன்ற உரிமைகளை உள்ளடக்கியதாகும். இவ் அடிப்படை உரிமைகள் மீறப்பட்ட 3 சம்பவங்கள் மார்ச் மாதத்தில் அறிக்கையிடப்பட்டன.**

**அட்டவணை 2: 2022 மார்ச் மாதம் : ஊடகவியலாளர்களின் பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் – சம்பவங்கள் 03**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| தாக்குதல் | 02 |
| உளவியல் ரீதியான துஷ்பிரயோகம் | 01 |
| **மொத்தம்** | **03** |

1. **வவுனியா புதுக்குளம் பகுதியில் இடம்பெற்ற விபத்து தொடர்பாகச் செய்தி சேகரிக்க சென்றபோது ஊடகவியலாளர் இராசையா ஜெயசங்கரின் புகைப்படக்கருவியை சில நபர்கள் தாக்கிச் சேதப்படுத்தியமை.**

வவுனியா குருக்கள்புதுகுளம் பகுதியில் மார்ச் 06 ஆம் திகதி அன்று காலை 10:00 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் தந்தை சம்பவ இடத்திலையே பலியாகியதுடன் மகன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் மரணமடைந்திருந்தார். இதனையடுத்து ஆவேசம் அடைந்த குறித்த பகுதி மக்கள் பேருந்தினையும் தாக்கியிருந்தனர். குறித்த சம்பவத்தினை செய்தி

சேகரித்து கொண்டிருந்த வவுனியா மாவட்ட ஊடகவியலாளரின் பல ரூபா பெறுமதியான புகைப்பட கருவியினை குறித்த பகுதிமக்கள் பறிக்க முற்பட்டதோடு, புகைப்பட கருவியினையும் அடித்துச் சேதப்படுத்தியுள்ளார்கள்.இவ்விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட ஊடகவியலாளரான இராசையா ஜெயசங்கர் பூவரசங்குளம் காவல் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்துள்ளார். (புகார் எண். C.I.B. 216/60).

https://tamilwin.com

2. **பொலிசாரின் ஊழல் தொடர்பில் வெளியான அறிக்கை/கட்டுரை காரணமாக அருண பத்திரிகையின் செய்தி ஆசிரியர் சமிந்த சேனாரத்னவுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை.**

   2022 மார்ச் 15ஆம் திகதி அருண பத்திரிகையில் 'திடீரெனப் பணக்காரர்களாக மாறும் காவல்துறையினர்' என்ற தலைப்பில் கட்டுரை பிரசுரிக்கப்பட்டதன் பின்னர் மார்ச் 18ஆம் திகதி தொலைபேசியில் கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தொலைபேசி இலக்கம் மற்றும் இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட வட்ஸ்அப் இலக்கங்களிலிருந்து அச்சுறுத்தல் அழைப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகச் சுதந்திர ஊடக இயக்கம் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. மேலும் இந்தச் சம்பவம் தொடர்பில் CIB 3 272/143 என்ற முறைப்பாட்டு எண்ணின் கீழ் காவல்துறையிடம் புகார் அளித்துள்ளதுடன், அது தொடர்பில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கோரி சுதந்திர ஊடக இயக்கம் பொலிஸ்மா அதிபரிற்கு கடிதம்மூலம் வேண்டுகோள் விடுத்தது.

   ஆதாரம்: 1. FMM Media Rights Monitoring Desk
   2. https://www.sinhala.srilankamirror.com

3. **மார்ச் 31, 2022 ஆம் திகதி அன்று மிரிஹானவில் நடைபெற்ற பாரிய ஆர்ப்பாட்டத்தைச் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் குழுமீது தாக்குதல் நடத்தப்பட்டமை மற்றும் புகைப்பட உபகரணங்களுக்குச் சேதம் விளைவித்தமை.**

   மார்ச் 31ஆம் திகதி நுகேகொட மிரிஹான பிரதேசத்தில் ஜனாதிபதியின் தனிப்பட்ட இல்லத்திற்கு அருகில் நடைபெற்ற போராட்டத்தைச் செய்தி சேகரிக்கச் சென்ற 7 ஊடகவியலாளர்கள் பாதுகாப்புப் படையினரால் தாக்கப்பட்டதுடன், அவர்களது புகைப்படக்கருவிகளும்கடுமையாகச்சேதப்படுத்தப்பட்டன.தாக்குதல் காரணமாகப் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். பத்திரிகையாளர் ஒருவர் கைது செய்யப்பட்டார். ஊடகவியலாளர்கள் என்பதை உறுதிப்படுத்திய பின்னரும் தாங்கள் தாக்கப்பட்டதாக ஊடகவியலாளர்கள் கூறுகின்றனர். ஊடகவியலாளர்களான சுமேத சஞ்சீவ கால்லகே, அவங்க குமார, நிஸ்ஸங்க வெரபிடிய, பிரதீப் விக்கிரமசிங்க, லஹிரு சாமர, சத்துர தேஷான் மற்றும் சுலோச்சன கமகே ஆகியோர் தாக்கப்பட்டதுடன் சஞ்சீவ கால்லகே கைது செய்யப்பட்டார். மேலும், போராட்டத்தின்போது வெளிப்படையாகப் பேசிய சமூக ஊடக ஆர்வலர்கள் உட்பட இன்னும் சில நபர்கள் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

   கைது செய்யப்பட்ட 54 பேரையும் தடுப்புக்காவலில் வைக்குமாறு காவல்துறையினர் கோரியதுடன் நீதிமன்றம்குறித்த கோரிக்கையை மறுத்து 48 பேருக்குப் பிணை வழங்கியது.இன்னும் 6 நபர்களை அடையாள அணிவகுப்பில் ஆஜராக உத்தரவிடப்பட்டது. கைதுசெய்யப்பட்டிருந்த சந்தேகநபர்களுக்கு ஆதரவாகச் பெரும் திரளான சட்டத்தரணிகள் முன்வந்தமை இலங்கை வரலாற்றில் விசேட சந்தர்ப்பமாகும்.

   சுதந்திர ஊடக இயக்கம் இத்தாக்குதலை கண்டித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டதுடன், பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளது. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் இந்தச் சம்பவம் தொடர்பில் முறைப்பாடொன்றையும் மேற்கொண்டுள்ளது.

   ஆதாரம்: 1. FMM Media Rights Monitoring Desk
   2. https://mawbima.lk

## சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள்

**ஊடக சுத்திரம் தொடர்பான சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் என்ற ஆக்கக் கூறுக்குள் உள்ளடங்கும் 03 சம்பவங்கள் மார்ச் மாதத்தில் அவதானிக்கப்பட்டன. அவற்றுள் ஊடக சுதந்திரம் உட்பட கருத்துச் சுதந்திரத்தின் மீது கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தும் இரண்டு சட்டங்கள் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.**

**அட்டவணை 03 – 2022 மார்ச் : சட்ட விதிமுறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் – 03 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சட்ட நடவடிக்கை மேற்கொள்ளல் | 01 |
| சட்ட திருத்தங்கள் / தகவல் அறியும் உரிமை | 02 |
| **மொத்தம்** | **03** |

1. **பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஒரு வருடமும் நான்கு மாதங்களும் தடுத்து வைக்கப்பட்டிருந்த மட்டக்களப்பு ஊடகவியலாளர் கோகிலதாசன் பிணையில் விடுவிக்கப்பட்டமை.**

   தனது முகநூல் கணக்கில் வெளியிடப்பட்ட புகைப்படங்கள் மற்றும் கருத்துக்கள் காரணமாகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருந்த அவர், சட்டமா அதிபரின் அறிவுறுத்தலின்

பேரில் மார்ச் 7ஆம் திகதி பிணையில் விடுவிக்கப்பட்டார். இவர் 28-11-2020 அன்று வாழைச்சேனை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவல் உத்தரவின் கீழ் தடுத்துவைக்கப்பட்டதுடன் பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டார். கோகிலாதாசனின் கைது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிரான துஷ்பிரயோகம் எனத் தேசிய மற்றும் சர்வதேச மனித உரிமைப் பாதுகாவலர்களின் விமர்சனத்திற்கு உள்ளானமை குறிப்பிடத்தக்கது.

ஆதாரம்: https://economynext.com

2. **பத்திரிகை சுதந்திரத்தை அச்சுறுத்தும் சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கிய தனிநபர் தரவு பாதுகாப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை.**

‘தனியார் தரவு பாதுகாப்பு சட்டம்’ மார்ச் 9 ஆம் திகதி அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது, இது ஊடக சமூகத்தின் பாரிய எதிர்ப்புக்குப் பாத்திரமானதுடன், இது பத்திரிகை சுதந்திரம் மற்றும் தகவல் அறியும் உரிமையை மோசமாகப் பாதிக்கும் சட்ட ஏற்பாடாகும். ஏழு ஊடக அமைப்புகளும், ட்ரான்ஸ்பரன்சி இன்டர்நேஷனல் ஸ்ரீலங்காவும், இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து, இந்தச் சட்டத்தில் தேவையான திருத்தங்களை முன்மொழிந்ததுடன், மேலும் இச்சட்டம் எவ்வாறு ஊடக சுதந்திரத்தை அச்சுறுத்துகின்றது என்பதை சுட்டிக்காட்டிய போதிலும் எவ்வித திருத்தமும் மேற்கொள்ளாமல் குறித்த சட்ட முன்மொழிவு அவ்வாறே நிறைவேற்றப்பட்டது.

இந்தச் சட்டமூலத்திற்கு எதிராக இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்தபோதிலும், தொழில்நுட்ப காரணங்களால் அது நிராகரிக்கப்பட்டது.

ஆதாரம்: 1. https://ceylontoday.lk

2. https://sinhala.lankanewsweb.net

3. **மனித உரிமைப் பாதுகாவலர்களின் கடும் எதிர்ப்புக்குக் பாத்திரமான பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிகத் திருத்தம்) முன்மொழிவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டமை.**

பயங்கரவாதத்தை தடுப்பதற்கான தற்காலிக ஏற்பாடுகள் திருத்தச் சட்டமூலம் பாராளுமன்றத்தில் 51 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. குறித்த சட்டத்திற்கு ஆதரவாக 86 வாக்குகளும் எதிராக 35 வாக்குகளும் அளிக்கப்பட்டன. மனித உரிமைகளுக்கு எதிரான கொடூர சட்டமான பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்குமாறு மனித உரிமைப் பாதுகாவலர்களின் நீண்டகால அழுத்தத்திற்குப் பதிலளிக்கும் வகையில் அரசாங்கம் இந்தத் திருத்தத்தை அறிமுகப்படுத்தியது. இருப்பினும் இந்தத் திருத்தம் குறிப்பிடத் தக்க மாற்றத்தை ஏற்படுத்தவில்லை என எதிர்ப்பாளர்கள் கூறுகின்றனர். மேலும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் இந்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

ஆதாரம்: 1. https://sinhala.slbcnews.lk

2. https://sinhala.lankanewsweb.net

## ஊடக சுயாதீனத்துவம்

**ஊடக சுயாதீனத்துவ ஆக்ககூறின் கீழ் , ஊடக நிறுவனத்தில் பணிபுரியும் பத்திரிகையாளர்களின் சுயாதீனத்துவம், வெளிநாட்டு ஊடகங்களின் பணிபுரியும் செய்தி ஆசிரியர் குழுவின் சுயாதீனத்துவம், அரசியல்வாதிகள், வணிக சக்திகள் மற்றும் மதத்தின் செல்வாக்கிலிருந்து ஊடக சுயாதீனத்துவம், விளம்பர அனுசரணை வழங்குதல் அல்லது வழங்காமல் இருத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக உள்ளடக்கத்தின் செல்வாக்கு செலுத்தல் போன்ற குறிக்காட்டிகள் இங்கு உள்ளடங்கும். அதன்படி, பல குறிகாட்டிகளை உள்ளடக்கிய மூன்று சம்பவங்கள் மார்ச் மாதத்தில் அவதானிக்கப்பட்டன.**

**அட்டவணை 04 – 2022 மார்ச் : ஊடக சுயாதீனத்துவம்– 02 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| ஊடக நிறுவனத்தில் ஊடகவியலாளர்களின் சுயாதீனத்துவம் | 01 |
| அரசியல் சக்திகள் / உரிமையாளர்களின் செல்வாக்கிலிருந்து சுயாதீனம் | 01 |
| **மொத்தம்** | **02** |

1. **ஹிரு தொலைக்காட்சி அலைவரிசை உரிமையாளரின் சகோதரரான துமிந்த சில்வா, ஊடகவியலாளர் ராகுல் சமந்த ஹெட்டியாராச்சியின் அறிக்கையிடலில் தாக்கம் செலுத்தியமை.**

அம்பலாந்தோட்டை பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத மணல் கடத்தல் காணொளி காட்சிகளை ஒளிபரப்ப வேண்டாமெனத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான துமிந்த சில்வா தொலைபேசிமூலம் தமக்கு அழுத்தம் கொடுத்ததாக ராகுல்

சமந்த ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.ராகுலினால் பதிவு செய்யப்பட்ட தொலைபேசி உரையாடலில் துமிந்த சில்வா தன்னை "ஹிரு அலைவரிசையில் உரிமையாளர் ரெனோ சில்வாவின் சகோதரர்" என்று அறிமுகப்படுத்திக் கொள்வதை தெளிவாகக் கேட்கக்கூடியதாக உள்ளது. ஒரு சுயாதீன ஊடகவியலாளரான ராகுல், ஹிரு தொலைக்காட்சி அலைவரிசைக்குச் செய்திகளை வழங்குவதுடன், இந்த சம்பவமானது ஊடகத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் ஊடக உரிமையின் அதிகாரத்தைப் பயன்படுத்துவதைக் காட்டுகின்றது. கொலைக் குற்றம் சாட்டப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட துமிந்த சில்வா, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் பொது மன்னிப்பின் பேரில் விடுவிக்கப்பட்டார், பின்னர் அவரைத் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். இந்நிலையில், இந்த இடையூறின் காரணமாக ஏற்பட்ட தாக்கத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது எனச் சுதந்திர ஊடக இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

2. முகப்புத்தகத்தில் பதிவிட்ட கருத்தின் காரணமாக ரூபவாஹினி தொலைக்காட்சி சேவையில் கடமை புரிந்த சுயாதீன ஊடகவியலாளர் பாரமி நிலேப்தி பணிநீக்கம் செய்யப்பட்டமை.

பாரமி நிலேப்தியின் கூற்றுப்படி, அவர் தனது முகநூல் கணக்கின் மூலம் அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் விமர்சித்ததாக எழுந்த குற்றச்சாட்டைத் தொடர்ந்து, தன்னை பணியிலிருந்து நீக்கம் செய்ததாக நிர்வாகம் அறிவுறுத்தியதாகத் தயாரிப்பாளர்கள் அவரிடம் தெரிவித்தனர். அரச ஊடகங்களில் பணியாற்றும் ஊடகவியலாளர்களுக்கும் அரசியலமைப்பில் உறுதியளித்துள்ள சிவில் உரிமைகள் காணப்படுகின்றது என்பதனை சுட்டிக்காட்டி சுதந்திர ஊடக இயக்கம் அறிக்கையொன்றை வெளியிட்டது. அதே போன்று, சுதந்திர ஊடக இயக்கம், ஊடகவியலாளர்கள் மீதான கண்காணிப்பு தொடர்பான சமீபத்திய குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வாய்ப்பாகவும் இச்சம்பவத்தை பார்க்கின்றது.

ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk.

## தொழில்சார் நிபுணத்துவம்

**'தொழில்சார் நிபுணத்துவம்' என்பது ஊடக சுதந்திரம் தொடர்பாகக் கவனிக்கப்படும் ஒரு முக்கிய காரணியாகும்.சிறந்த கல்வியை பெற்ற பத்திரிகையாளர்கள், பத்திரிகையாளர்களின் பணி நிலைமைகள், பத்திரிகையாளர்கள் மற்றும் பத்திரிகை ஆசிரியர் குழுவிற்கான சர்வதேச வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துதல், சுய—தணிக்கை, தொழிற்சங்கங்கள் மற்றும் அமைப்புக்கள் மூலம் பத்திரிகையாளர்களின் நிபுணத்துவ சுயாட்சி உறுதிப்படுத்தப்படல் மற்றும் பத்திரிகையாளர்களின் சமூக பங்குபற்றிய புரிதல், ஊடக தொழிலுக்கான அங்கீகாரம் போன்ற குறிகாட்டிகள் தொழில்சார் நிபுணத்துவம் என்ற ஆக்கக் கூறை பிரதிநிதிப்படுத்துகின்றது. இந்தக் குறிக்காட்டிகளின் கீழ் இரு சம்பவங்கள் மார்ச் மாதத்தில் அறிக்கையிடப்பட்டன.**

**அட்டவணை 05 – 2022 மார்ச் தொழில்சார் நிபுணத்துவம் – 02சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| பத்திரிகையாளர்கள் ஆசிரியர் குழு மற்றும் சர்வதேச வழிகாட்டுதல்களைப் பின்தொடர்தல் | 01 |
| ஊடகத்துறைக்கான அங்கீகாரம் | 01 |
| **மொத்தம்** | **02** |

1. **இலங்கையில் இணையப் பாவனையாளர்களின் பாதுகாப்பையும் சுய ஒழுங்குமுறையை வலுப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு SafeWebLK நிகழ்ச்சித்திட்டம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டமை.**

SafeWebLK இன் வேலைத்திட்டமானது, இலங்கையில் உள்ள இணையப் பாவனையாளர்களுக்கு மிகவும் பாதுகாப்பான இணைய சேவைகளை வழங்குவதற்கும், சமூக ஊடகங்கள் மூலம் தவறான தகவல்கள் மற்றும் வெறுப்புப் பேச்சுக்கள் பரவுவதைக் குறைப்பதற்கும், இணைய வழி வன்முறையைக் குறைப்பதற்கும், ஏற்கனவே உள்ள சுய ஒழுங்குமுறைப் பாதுகாப்பைக் மேம்படுத்துவதற்கும் உலகளாவிய இணைய நிறுவனங்களுடன் கூட்டு ஒப்பந்தத்தை எட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. சர்வதேச உறவுகள் விடயம் தொடர்பில் செயலாற்றும் Factum ஆராய்ச்சி நிறுவன தலைமையில் கீழ், ஆசியாவில் இது போன்ற சுய-ஒழுங்குமுறை நடத்தை அமைப்பு உருவாக்கப்படுவது இதுவே முதல் முறை ஆகும். மார்ச் 16 ஆம் திகதி அன்று நடைபெற்ற துவக்க நிகழ்வில் அமைச்சர்களான (முன்னாள்) அலி ஷப்ரி மற்றும் டலஸ் அழகப்பெரும ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஆதாரம்: http://srilankanews.lk

2. **இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் இணைந்து ஏற்பாடு செய்த 2019 மற்றும் 2020 ஆண்டிற்கான சிறந்த பத்திரிகைகளுக்கான விருது வழங்கல் நிகழ்வு கொழும்பில் நடைபெற்றது.**

"சிறந்த பத்திரிகைகளுக்கான விருது வழங்கல் நிகழ்வு 2019 மற்றும் 2020" மார்ச் 22 ஆம் திகதி அன்று கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்த விருதுகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழி ஊடகங்களில் 18 விருதுகல் வழங்கப்படும். இலங்கையில் முதல்தர ஊடக விருதுவழங்கும் விழா இதுவேயாகும் மேலும் இது 22 ஆவது விருதுவழங்கும் நிகழ்வாகவும் காணப்படுகின்றது.

## கட்டமைப்பு ரீதியான விதிமுறைகள்

**'கட்டமைப்புரீதியான விதிமுறைகள்" ஊடக சுதந்திரத்தின் மற்றொரு முக்கிய அங்கமாகும். ஊடக தொகுதியின் முழு கட்டமைப்பிற்கும் மற்றும் ஊடக சுதந்திரம் இயக்கப்படும் ஒட்டுமொத்த சூழலுக்கும் பொருந்தக்கூடிய 06 சாத்தியமான குறிகாட்டிகளை உள்ளடக்கியுள்ளது. அவற்றில் "கண்காணிப்புக் குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான செயல்திறன்சார் ஆதரவு" என்ற குறிகாட்டியின் கீழ் 3 சம்பவங்கள் மார்ச் மாதத்தில் கண்காணிக்கப்பட்டது.**

**அட்டவணை 06–2022 மார்ச் கட்டமைப்புரீதியான விதிமுறைகள் – 03 சம்பவங்கள்**

| குறிகாட்டி | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை |
|---|---|
| கண்காணிப்பு குழுக்களின் ஊடக சுதந்திரத்திற்கான ஆதரவு | 03 |
| **மொத்தம்** | **03** |

1. **மார்ச் 2 ஆம் திகதி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழு முன்னிலையில் கருத்து தெரிவித்தமை.**

   நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு கோரி மார்ச் 2ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோர் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முன்னிலையில் கருத்து முன்வைத்தனர்.

   ரஞ்சன் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியபோது மேற்படி குற்றச்சாட்டின் பேரில் குற்றம் சாட்டப்பட்டு நான்கு வருட சிறைத்தண்டனையும் ஏழு வருடங்கள் சிவில் உரிமைகள் இடைநிறுத்தமும் விதிக்கப்பட்டது. கடந்த டிசம்பரில், நீதிமன்றத்தால் சிறையில் அடைக்கப்பட்ட ரஞ்சன் ராமநாயக்கவை விடுதலை செய்யுமாறு ஜெனீவாவை தளமாகக் கொண்ட "நாடாளுமன்றங்களுக்கு இடையிலான ஒன்றியம்" (IPU) இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தது.

   ஆதாரம்: https://www.news19.lk

2. **மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டத்தால் தகவல் அறியும் உரிமைச்சட்டம் மற்றும் பேச்சு, கருத்துச் சுதந்திரத்தின் மீதான தாக்கம்குறித்து பொது கருத்தாடல் ஒன்றை ஏற்பாடு செய்தமை.**

   தகவல் அறியும் உரிமைச் சட்டம் மற்றும் பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தின் மீதான தனிநபர் தரவுப் பாதுகாப்புச் சட்டத்தின் தாக்கம்குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தவும் எதிர்கால நடவடிக்கைகள்குறித்து ஆலோசிக்கவும் மார்ச் 11 ஆம் திகதி பிற்பகல் 02.00 மணி முதல் 4.00 மணிவரை கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெற்றது. சட்டத்தரணி நுவன் போபகே பிரதான உரையை நிகழ்த்தியதுடன், சட்டத்தரணி பிரபோத ரத்நாயக்க, சட்டத்தரணி பியூமி மதுஷானி மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் தமது கருத்துகளை முன்வைத்தனர்.

   ஆதாரம்: FMM Media Rights Monitoring Desk

3. **"மீடியா சலோன்" நிகழ்ச்சித்திட்டத்தின் உதவியுடன் "ஊடகத்தில் வன்முறையை ஒழித்தல்" என்ற தலைப்பில் கீழ் கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டமை**

   #MeToo வேலைத்திட்ட பின்னணியில், செய்தி அறையில் பாலின அடிப்படையிலான வன்முறைகுறித்த உரையாடலை உருவாக்குவதே இந்த அமர்வின் நோக்கமாகும்.

   ஊடக சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரம் மீதான அச்சுறுத்தல்கள்பற்றிய புதிய தகவல்களைப் பரிமாறிக் கொள்ளுதல், சாத்தியமான செயல்களைப் பற்றி விவாதித்தல், மற்றும் ஊடகவியலாளர்கள் பேச்சு சுதந்திரத்திற்கான அச்சுறுத்தல்களை அடையாளம் காண பாதுகாப்பான இடத்தை வழங்குதல் போன்ற நோக்கங்களுடன் ஹெஷ்டேக் தலைமுறை (Hashtag Generation), USAID (சர்வதேச வளர்ச்சிக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனம்) ஆதரவுடன் IREX நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் ஜனநாயக இலங்கைக்கான ஊடக வலுப்படுத்தல் (MEND) நிகழ்ச்சித்திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த மீடியா சலோன் திட்டம் அமைந்துள்ளது.

**அட்டவணை 7 : ஊடக சுதந்திரம் : 2022 ஜனவரி முதல் மார்ச் வரை சுதந்திர ஊடக இயக்கத்தால் அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை**

| உள்ளடக்கப்பட்டுள்ள குறிகாட்டிகள் | 2022 ஜனவரி–பெப்ரவரி | | 2022 மார்ச் |
|---|---|---|---|
| | புதிய சம்பவங்கள் | முன்னைய சம்பவங்களின் வளர்ச்சிப்போக்கு | |
| பாதுகாப்பு மற்றும் உத்தரவாதம் | 4 | | 03 |
| சட்டவிதி முறைகள் அல்லது சட்டரீதியான கட்டுபாடுகள் | 6 | | 03 |
| ஊடக சுயாதீனத்துவம் | - | | 02 |
| கட்டமைப்பு ரீதியான நிபந்தனை | 14 | | 03 |
| தொழில்சார் நிபுணத்துவம் | - | | 02 |
| **மொத்தம்** | **24** | | **13** |

2022 ஊடக சுதந்திர உரிமைகள் கண்காணிப்பு அறிக்கை ஜனவரி-மார்ச் வரை இங்கு பார்வையிடவும்

**பின்னுரை:** சிவில் சமூக குறிக்கோள்கள், தேசிய மற்றும் சர்வதேச வழக்கு தீர்ப்புகள் மற்றும் அனைத்துலக பிரகடனாங்களுக்கு ஏற்ப, ஊடக சுதந்திரம் என்பது மனித உரிமை என சுதந்திர ஊடக இயக்கம் உடன்படுவதுடன்.அனைத்து மனிதர்களுக்கும் காணப்படவேண்டிய சிந்தனை சுதந்திரம், மனசாட்சி சுதந்திரம், மதச்சுதந்திரம் மற்றும் மற்றவர்களின் கருத்துக்களை தெரிந்து கொள்வதற்கான அடிப்படை உரிமைகளை தடையேதும் இன்றி அனுபவிப்பதற்கான சுதந்திரமே மனித உரிமையாகும். இந்த அடிப்படையில் ஊடக சுதந்திரம் என்பது பின்வரும் பத்து பகுதிகளை உள்ளடக்கிய தொகுப்பு என சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

(1) சிந்தனை சுதந்திரம் (2) கருத்து தரிப்பதற்கான சுதந்திரம் (3) கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் (4) அமைதியான முறையில் மேற்கொள்ளப்படும் ஒன்றுகூடல் உரிமை மற்றும் கருத்து தெரிவிக்கும் சுதந்திரம் (5) தகவல் அறியும் உரிமை (6) கேட்டல் மற்றும் பார்த்தல் வழி சார்ந்த பதிவு செய்தல் மற்றும் அறிக்கை வைத்துக்கொள்வதற்கான சுதந்திரம் (7) பதிப்புச்சுதந்திரம் (8) செய்திப்பத்திரிகை சுதந்திரம் (9) இலத்திரனியல் ஊடக சுதந்திரம் (10) இணைய சுதந்திரம். என்பனவையே இதன் பகுதிகூறுகள் ஆகும்.

இந்த ஒவ்வொரு பகுதிகளும் ஒன்றோடொன்று தொடர்பு உடையதாக காணப்படுவதனால் ஒரு பகுதிகூறுக்கு ஏற்படும் வரையறைகள் மற்றும் தாக்கங்கள் ஊடக சுதந்திரம் தொடர்பில் காணப்படும் அனைத்து பகுதிக்கூறுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை சுதந்திர ஊடக இயக்கம் ஏற்றுக்கொள்கின்றது. எனவே பொறுப்பற்று மற்றும் வெறுப்புணர்வுடன் மேலே குறிப்பிட்ட சுதந்திரங்களை அத்துமீறி அனுபவிப்பதானது சிறந்ததொரு முறையல்ல என்பதனை சுதந்திர ஊடக இயக்கம் கருதுகின்றது.

இந்த மாதாந்த அறிக்கை தயாரிக்கபடுவது பொது ஊடகத்தில் பிரசுரிக்கப்படும் மற்றும் சுதந்திர ஊடக இயக்கத்திற்கு கிடைக்கப்பெறும் தவல்களுக்கு அமைய மேலதிக தகவல்களை தேடி அறிந்து அந்த நிகழ்வுகளை ஆய்வுக்குட்படுத்திய பின்னரேயாகும்.இந்த ஆய்வின் போது சுதந்திர ஊடக இயக்கம் மேலே குறிப்பிட்ட பத்து ஊடக சுதந்திர சட்டெண் பகுதிகளை உள்ளடக்கிய சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஏழு தொகுப்புகளின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடிப்படை அளவுகோல்களை கொண்டே கண்காணிப்பு நடவடிக்கையை மேற்கொள்கின்றது.

Free Media Movement

Convener: Lasantha De Silva +94 71 166 7938, +94 77 810 7620 | Secretary: Hana Ibrahim +94 77 741 2995

Treasurer: Ananda Jayasekara +94 77 312 4850

No 96, Bernard Soysa Mw, Colombo 05. Tel: +94 112368895 Fax: +94 112368895;

Web: www.fmmsrilanka.lk, www.mediareform.lk

Email: fmmsrilanka@gmail.com | Facebook: https://www.facebook.com/fmm.srilanka

Twitter: https://twitter.com/FMMsrilanka | #FMM25